# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2398/18 - 2024 අගෝස්තු මස 21 වැනි බදාදා - 2024.08.21

*2398/18 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 21 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

***1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டம்***

*1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கம் கொண்ட சட்டங்கள் மூலம் திருத்தி அமைக்கப்பட்ட 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவு மற்றும் 14 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, 20 ஆவது பிரிவின் கீழ் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சராகிய ரணில் விக்கிரமசிங்க ஆகிய என்னால் பின்வரும் விதிமுறைகள் ஒழுங்குபடுத்தப்படுகின்றன.*

**ரணில் விக்கிரமசிங்க,**
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசியக் கொள்கைகள் அமைச்சர்.

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு,
கொழும்பு 01.
2024 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 21 ஆந் திகதி.

### ஒழுங்குவிதிகள்

1. இவ் ஒழுங்குவிதிகள் "**2024 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொடுப்பனவு முறைகளுக்கான இறக்குமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள்** " என அழைக்கப்படும்.

2. பின்னர் திருத்தம் செய்யப்பட்ட 2022 மே மாதம் 06 ஆம் திகதிய 2278/21 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2022 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கொடுப்பனவு முறைகளுக்கான இறக்குமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள் இத்தால் மேலும் திருத்தம் செய்யப்படுகின்றன.

3. 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுச் சட்ட ஏற்பாடுகளின் அர்த்தத்தில் "மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு வியாபாரம்" என பெயரிடப்பட்ட அதிகாரமிக்க ஒருவரால் 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ள கொழும்பு துறைமுக நகரத்தின் அதிகார எல்லைக்குள் மற்றும் அங்கிருந்து அவ்வாறான அதிகாரமிக்க ஒருவரின் அச் சட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட எந்தவொரு செயற்பாடுகளையும் செய்வதற்கு, அவ் அதிகாரமிக்கவரின் பெயரில் இறக்குமதி செய்யப்படுகின்ற மூலதன / வேலைத்திட்டம் தொடர்பான பொருட்கள் உள்ளிட்ட பொருட்கள், அவ்வாறான பொருட்கள் இலங்கையின் எந்தவொரு துறைமுகத்திற்கும் / விமான நிலையத்திற்கும் வந்தடைவதற்கு முன்னர் பெற்றுக் கொள்ளப்பட்ட கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவின் சிபாரிசின் அடிப்படையில், திறந்த கணக்குக் கொடுப்பனவு முறையின் கீழ் சுங்க விடுவிப்பு செய்வதற்கு இலங்கைச் சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதி வழங்கப்படும். திறந்த கணக்குக் கொடுப்பனவு முறையின் கீழ் அவ்வாறான பொருட்களை இறக்குமதி செய்வதற்கு கொடுப்பனவு அதிகாரமிக்கவரால் 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் ஈட்டப்பட்ட அந்நிய செலாவணி மூலம் செலுத்தப்பட வேண்டும்.

4. இவ் ஒழுங்குவிதிகளில் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக, இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு நாயகத்தினால் சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு மற்றும் உரிமம் பெற்ற வங்கிகளுக்கு "செயற்பாட்டு ஆலோசனைகள்" வழங்கப்பட வேண்டும்.

5. அனுமதிக்கப்பட்ட எவரொருவராலும் மேலே ஒழுங்குவிதி இலக்கம் 3 ஐ மீறி மேற்கொள்ளப்பட்ட இறக்குமதி தொடர்பாக இலங்கைச் சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகத்திடம் கேட்டறிதல் வேண்டும்.

6. இவ் ஒழுங்குவிதிகள் 2025 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆம் திகதி வரை மட்டுமே நடைமுறையில் இருக்கும்.

EOG 08-0285

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.